**செ.வெ.எண் : 242** **நாள் : 30.10.2025**

**செய்தி வெளியீடு**

**சென்னை மத்திய மண்டல குழந்தைகள் நல குழுவில் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிய உதவியாளருடன் இணைந்த கணினி இயக்குபவர் பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது – சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

சென்னை மத்திய மண்டல குழந்தைகள் நல குழுவில் காலியாக உள்ள ஒரு உதவியாளருடன் இணைந்த கணினி இயக்குபவர் பணியிடம் தொகுப்பூதியம் அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது.

உதவியாளருடன் இணைந்த கணினி இயக்குபவர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்க விண்ணப்பதார்கள் பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும், கணினி அறிவு (சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்) மற்றும் தட்டச்சில் தமிழ் மற்றும் ஆங்கிலம் முதுநிலை தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 42 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் கூடாது. (பொது விண்ணப்பதாரர்களுக்கு) இப்பணியிடத்திற்கான தொகுப்பூதியமாக மாதம் ரூ.11,916/– நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்ப படிவத்தை https://chennai.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தகுதி வாய்ந்த நபர்கள் மேற்கண்ட பதவிக்கு விண்ணப்ப படிவத்தில் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்துடன் பூர்த்தி செய்து 14.11.2025 (வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணிக்குள் **மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, எண். 13, சாமி பிள்ளைத் தெரு, சூளை நெடுஞ்சாலை, சூளை, சென்னை–600 112** என்ற முகவரியில் கிடைக்கப் பெறுமாறு விண்ணப்பிக்கலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும். தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் நியமனம் அமையும். இது குறித்து அரசின் முடிவே இறுதியானது என சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

****

**வெளியீடு : –**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**சென்னை–01.**